<u>பத்திரிக்கைச் செய்தி</u>

<u>உட்பிரிவு செய்து பட்டா வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக துணை ஆய்வாளர் சர்வே அவர்களுக்கு 3 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு</u>

திருச்சி மாவட்டத்தில் வசித்து வந்த புகார்தாரர் திரு.சக்ரவர்த்தி (ஓய்வு பெற்ற தலைமை காவலர்) என்பவர் தான் வங்கி கடன் வாங்கி தன்னுடைய நிலத்தில் வீடு கட்டுவதற்காக கடந்த 2007ம் ஆண்டு நிலத்தினை உட்பிரிவு செய்து பட்டா கேட்டு திருச்சி மாவட்டம், தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். 16.10.2007ம் தேதி அன்று இந்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.கணேசமூர்த்தி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே, தாலுகா அலுவலகம், திருச்சி மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.கணேசமூர்த்தி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே, தாலுகா அலுவலகம், திருச்சி மாவட்டம் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.கணேசமூர்த்தி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.1,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது திருச்சி மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 25.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.கணேசமூர்த்தி, முன்னாள் துணை ஆய்வாளர், சர்வே அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.1,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# PRESS NOTE

## DEPUTY INSPECTOR OF SURVEY CONVICTED FOR 3 YEARS FOR DEMAND AND RECEIVING BRIBE FOR ISSUING SUBDIVISION PATTA

The complainant Tr.Chakravarthy (Retired Head Constable) decided to construct a house in his land on bank loan basis in the year 2007. He applied for subdivision patta name transfer of his land at Trichy Taluk office. On 16.10.2007, Tr.Ganesamoorthy, formerly Deputy Inspector of Survey, Taluk office, Trichy district demanded Rs.1,000/- as bribe for processing his application. Complainant not willing to give bribe money, approached Vigilance & Anti – Corruption, Trichy Detachment, and gave complaint against Tr.Ganesamoorthy. In this connection a case was registered and a trap was organized by Vigilance & Anti – Corruption, Trichy Detachment. During trap proceedings, Tr.Ganesamoorthy, formerly Deputy Inspector of Survey received the bribe money of Rs.1,000/- from the complainant and he was arrested by V&AC Trichy detachment. Today 25.11.2022, the Special Judge, Trichy, convicted the accused Tr.Ganesamoorthy, formerly Deputy Inspector of Survey, Taluk office, Trichy district, concerned in Trichy Detachment, V&AC trap case in 2007, to undergo 1 year Rigorous Imprisonment with fine of Rs.10,000/- for bribe demand and 3 years Rigorous Imprisonment with fine of Rs.10,000/- for receiving the bribe and to undergo both punishments concurrently.